அரிச்சந்திர புராணத்தையும், நளாயினி கதையையும், இராமாயணத்தையும், பாரதத்தையும் படிக்க வைத்தால், பின்னும் அதிகமாக அடிமைகள் ஆவார்களா சுதந்திரம் அடைவார்களா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்...'

கட்டியக் காரன் : இதுக்கு நம்மகிட்டெ உடனடியா பதிலில்ல. ஆனா அதுக்கான பணி இருக்கு. நாம எல்லாத்தையும் படிப்போம்.. அதெல்லாம் நடைமுறை வாழ்க்கைக்குச் சரியா என்று அறிவியல் பூர்வமாக் கேள்விகளை எழுப்புவோம். 'அம்பா' கதையும், புதுவாசிப்புலெ, பொண்ணெ 'அம்போ'ன்னு விட்டெதெப் பத்தினக் கேள்வியெத்தான் நமக்குள்ள எழுப்புது. அந்தக் கேள்வியோடவே நாடகத்துக்கு இப்ப மங்களம் பாடலாமா?........

நடிகர்கள் : மங்களம் எப்படிப் பாடுறது?

கட்டியக் காரன் : இந்த நாடகத்துக்கான சுப மங்களம், பாரதியின் பெண்கள் விடுதலைக் கும்மியாய் இருக்கட்டும்!

*(அனைவரும் 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்/ எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்பதைப் பாடி வணங்குகின்றனர்.)*

★

வி. சக்தி புராணம் ...
வியாபாரம...

**விதூஷகன் 1:**

வந்தருள்வாய் கணநாதா!- வளம்பெறவே

வரந்தருவாய் குணசீலா!-அய்யா!

நல்லமழை பெய்ய வேணும்...

நாடெல்லாம் செழிக்க வேணும்...

செல்லமழை பெய்ய வேணும்...

செகமெல்லாம் செழிக்க வேணும்...

நாடகம் பார்க்க வந்திருக்கும் சபையோரே!-எங்கள்

மனம் நிறைந்த சுவையோரே!

கணபதிஅருளினாலே... எங்கடா போச்சு சாமி? சாமி... சா
புள்ளையார்சாமி...

**விதூஷகன் 2:**

நாடெல்லாம் காடாகித்தான் போச்சி!-அய்யா

காடெல்லாம் காய்ஞ்சிப் போகலாச்சி!

சொல்லெல்லாம் செல்லரித்துப் போச்சி!- உடம்பின்

செல்லெல்லாம் செத்துப் போகலாச்சி!

செல்போனா வாழ்க்கை அமஞ்சிப் போச்சி!-ஜெகபதி

கணபதிக்கே கனெக்ஷன் இப்பக் கட்டாகித்தான் போச்சி

எப்போ இங்கே வரப் போறார்?- கணபதி

வந்து என்ன வரம் தரப் போறார்?

வி.1 : ஏய்! இதெல்லாம் உன் 'வேலை'யா?

வி.2 : 'என்' வேலை இல்லெ! எல்லாம் 'அவன்' வேலை தான்! இருடி வச்சாதான் புள்ளையாருக்கே சக்தி வரும்னு, இருட்டுக்குப் புள்ளையார் கழி போட்டுக் குடுத்தது யாரு வேலெ?... ஒன் வேலையா? இல்லை ஒம் புள்ளையார் வேலையா?

வி.1 : பாத்தியா... நாந்தி பாடுற கேப்புலெ நாத்திகம் ஓட்றான்.. கவனமாயிருக்கணும்... வம்பு தும்புன்னா இவனுங்க வாலாட்டுறதே எங்க புள்ளையார்ட்ட தான்... ஏய்... ஆத்திகத்தைச் சீண்டிப் பாக்காதெ!

வி.2 : சீண்டிப் பாக்கலெ, தோண்டிப் பாக்குறேன்......

வி.1 : என்னது தோண்டிப் பாக்கியா?

வி.2 : ஆத்திகங்றது கண்ணை மூடிட்டு ஒண்ணை அப்படியே நம்புறது... ஆனா நாத்திகங்றது...

வி.1 : கண்ணைத் தொறந்துட்டு அதுமேலச் 'சும்மா'க் கேள்விகளா எழுப்புறது! ....

வி.2 : ஆத்திகமோ நாத்திகமோ... திரிச்சாதான் அது கயிறு...

வி.1 : சாமியோ பூமியோ.... மரிச்சாதான் அது உசிரு...

வி.2 : செரச்சாதான் அது மசுரு...

வி.1 : வெரச்சாதான் அது குளிரு...

வி.2 : கட்டுனாத்தான் அவ மாமி!...

வி.1 : நம்புனாத்தான் அது சாமி.

வி.2 : நம்பாதவனுக்கு அது வெறும் அம்பிதான்!

வி.1 : அம்பியோ உம்பியோ... சாமிங்றது ஒரு நம்பிக்கை... நாடகத்லெ புள்ளையார்சாமி வணக்கங்றது ஒரு ஐதீகம்... அதுதான் எனக்கு வேதம்!...

வி.2 : வேதமோ விவேகமோ? 'சும்மா'க் கெடக்கு... திண்டுன்னு.... நாந்தான் இதுமேலக் குந்தியிருந்தே... கம்முன்னு... நீயும் வந்த அவசரத்துலெ கண்ண... மூடிட்டு என்னையப் புள்ளையாராக் கும்புட்டு... நாடகத்தெத் தொடங்கிட்டே!

வி.1 : நீயா குந்தியிருந்தே!... புள்ளையாராவா?.. அய்யய்யோ... நாத்திகப் புள்ளையாரக் கும்பிட்டா நான் நாத்... பாடுனேன்!.... இந்தப் பாவத்தெ நான் எங்கெ போய்... கழுவ?....

வி.2 : எங்கெயாவது போய்க் கழுவு. அதுக்கு ஏ... அழுவுறே?

வி.1 : கருப்புச் சட்டையிலெ நீ இருக்கும்போதே எனக்கு... சின்னதா ஒரு சந்தேகம் வந்திச்சி...

வி.2 : கருப்புக் கண்ணாடி போட்டுப் பாத்தா பாக்கு... தெல்லாம் கருப்பாத்தான் தெரியும்... இப்பவு... ஒண்ணும் குடிமுழுகிப் போயிடலை... கிரிக்கெட் புள்ளையாரு... ஃபுட்பால் புள்ளையாரு மாதிரி... என்னையக் கருப்புச் சட்டப் புள்ளையாரா நெனச்சி... நாடகத்தெத் தொடங்கு.

வி.1 : சாமி சரணம்!... கருப்புன்னாலே எனக்கு... வெறுப்புதான் வருது...

வி.2 : சரி....கருப்புச் சட்டைக்காரன் வேண்டான்னா... கூட்டத்துலயிருந்து ஒரு செகப்புச் சட்டைக்காரனை... புடிச்சிப் புள்ளையாரா ஒக்கார வச்சிக் கதையை... நடத்து!

வி.1 : செகப்புச் சட்டையா? அது இன்னுமே டேஞ்சராச்சே...

வி.2 : செகப்பு இல்லேன்னா மஞ்சள்!

வி.1 : அய்யா! ஆபத்தெ வெல குடுத்து வாங்கச் சொல்றியா!

வி.2 : மஞ்சள் இல்லேன்னா பச்சை....

வி.1 : அம்மா...டி!... சொந்தக் காசுலெயே எவனாவது சூனியம் வச்சிக்கிருவானா?

அட... பிச்சையும் இல்லேன்னா... காவி.

அட... கோவண மயா சாமி... ஆளைவுடு!

என் செல்லையோ... கலருங்க இங்கே இருக்குதே! கண்ணுக்குக் குளிர்ச்சியான கலராப் பாத்து [illegible] கட்டிகிடு...

எதுக்கு?... இங்கென்ன இலவசமாக் குடுக்கப் போறோம்!... இயற்கைதான் எனக்குப் புடிச்ச கலரு!..... யானை நம்பி நான் பொறந்தேன் போங்கடா போங்க... என் கருத்து வெல்லும். வென்ற பின்னே வாங்கடா வாங்க....

ஏய்! என்ன ஆச்சு ஒனக்கு?

அவதாரத்துக்கு நானே புள்ளையாரா இருந்துக்கிறேன்... ம்ம்ம்.... நீ கதையை ஆரம்பி!.

அய்யா சாமி! இந்த ஆசாமிக்கு ஒங்ககிட்ட ஒரு கேள்வியிருக்குது. ஒண்ணு மனுஷனா இருக்கணும், இல்லை யானையா இருக்கணும். இதென்ன பாதி யானை; மீதி மனுஷன்னு!......

அது ஒரு சமூகத்தின் கற்பனை!

அப்படிக் கொழந்தை பொறந்தா யாராச்சும் ஒத்துக்குவாங்களா?

அழுகிப்போகும் நாக்கு... அந்தக் கற்பனைதான் அழகு! அதுதான் சாமி!

கற்பனை அழகுதான். அது பொய் அழகு!

கன்னத்துக்கு பொய் அழகு!... கண்ணுக்கு மை அழகு!

அதுபோலதான் உண்மையும் [illegible] அழகு.

உண்மையிலே என்ன அழகு இருக்கு? கற்பனைக்குத்து [illegible] புனைவுதான் அழகு!

உண்மைதான் அழகு!

: புனைவுதான் அழகு!

**வி.1** : இல்லெ... உண்மெதான் அழகு!

**வி.2** : உண்மைங்றது அம்மணம். அம்மணங்றது அசிங்கம். புனைவுதான் அதுக்கு ஆடை கட்டி அழகாக்குது. புனைவுதான் அழகு! கலைகள் எல்லாம் புனைவு! பத்துத்தலை ராவணன் சீதையைக் கடத்திக்கிட்டுப் போனது புனைவு!.... அனுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிட்டுப் பறந்தது புனைவு!..... கண்ணகி, ஒரு முலையினாலெ மதுரையை எரிச்சதுங்றது புனைவு! இதெல்லாந்தான் அழகு... இப்பச் சொல்லு. உண்மையா புனைவா எது அழகு? உன் மனசைத் தொட்டுச் சொல்லு...

**வி.1** : உண்மையில்லாம புனைவு இல்லை. உண்மைங்றது உள்ளது; பத்துங்ற உண்மையும் தலைங்ற உண்மையும் இல்லாமெ பத்துத்தலைங்ற புனைவு கிடையவே கிடையாது... புனைவுங்றது உண்மையோட அவுங்கவுங்க மனசு சேர்றது. ஒரே உண்மை நீ சொன்னா உன் புனைவு! அவன் சொன்னா அவன் புனைவு. நான் சொன்னா என் புனைவு!

**வி.2** : புனைவுகளின் கைபிடிச்சி அப்படியே தொடர்ந்து போனா...

**வி.1** : தொடர்ந்து போனா... உண்மை, காக்கா காக்கா வாந்தியெடுத்த வதந்தியாயிரும்... உண்மைதான் அழகு...

**வி.2** : புனைவுதான் அழகு....

**வி1** : உண்மைதான்...

**வி.2** : புனைவுதான்...

**வி.1** : உண்மை...

**வி.2** : புனைவு.

வி.2 : *(பார்வையாளரிடம்)* ஏங்க நீங்களே சொல்லுங்க... உண்மைதானே அழகு?

வி.1 : நீங்களே சொல்லுங்க... புனைவுதானே அழகு?

வி.2 : நீங்க சொல்லுங்க... உண்மையா புனைவா எது அழகு?

வி.1 : இங்க பாரு... நீ உண்மையெ நம்புறெ... ஒனக்கு உண்மைதான் அழகு...

வி.2 : இங்க பாரு... நீ புனைவை நம்புறெ... ஒனக்குப் புனைவுதான் அழகு...

வி1 : நம்மச் சண்டையப் பாக்குறதுக்கு இவுங்க இங்கெ வரலெ. நாடகம் பாக்ற நம்பிக்கையோட வந்திருக் காங்க.. நம்ம சண்டையெப் பெறவு வச்சிக்கலாம்..

வி.2 : ம்ம்ம்.... அதுவுஞ்... சரிதான்!

வி.1 : கைகேயி கேட்ட வரத்துனாலெ...

வி.2 : இராமாயணம் உருவாச்சி... இப்ப இங்கெ கூடியிருக்குற மக்கள மதிச்சி...

வி.1 : நாடகமாயணம் ஒண்ணெ உருவாக்குவோம்...

வி.2 : நாடகமாயணம்...

வி.1 : நாடகமாயணம்...

வி.2 : நாடகமாயணம்...

வி.1 : நாடகமாயணம்...

வி.2 : நாடகமாயணமோ இராமாயணமோ.. வெந்தாத்தான் அது...

வி.1 : சோறு... வெளஞ்சாத்தான் அது...

வி.2 : பயிரு... வெட்டியாப்போனாதான் அது...

வி.1 : பதரு... நெறஞ்சாத்தான் அது..

வி.2 : குதிரு...நெளிஞ்சாத்தான் அது...

வி.1 : போதும் சமரு!... நீ சும்மா அமரு!....

**வி.1வி.2** : நாடகமாயணம்... நாடகமாயணம்...

**வி.2** : கலக்கலா ஒண்ணு வந்திச்சி... எகனைக்... மொகனையா நீ பண்ணுனதுல அது சொல்லாம... கொள்ளாமப் போயிடுச்சி... போனாப் போகட்டும்...

**வி.1** : போனால் போகட்டும் போடா...

**வி1-வி.2** : இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாரடா... போனால் போகட்டும் போடா...

**வி.1** : வந்தது தெரியும் போவது எங்கே... வாழ்க்கை நமக்கே தெரியாது..

**வி.2** : வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கேன் இடமேது? வாழ்க்கை என்பது வியாபாரம்...

**வி.1** : வரும் ஜனனம் என்பது வரவாகும்...

**வி.2** : அதில் மரணம் என்பது செலவாகும்....

**வி.1** : தம்பீ! வரவு செலவுக் கணக்கெ வச்சி வாழ்க்கையெ என்னாத் தத்துவமாப் பாத்திருக்குறாரு கவிஞரு!

**வி.2** : வாழ்க்கையையே அவரு வியாபாரமாப் பாத்திருக்காரு!...

**வி.1** : எனக்கொரு ஐடியா... வியாபாரம் பத்தி நாடகம் போட்டா என்ன?

**வி.2** : வியாபாரம் பத்தியா?......வியாபாரம்னா.... ஒரு கம்பெனி வேணும்...

**வி.1** : இந்தா இருக்கு கம்பெனி...

**வி.2** : பொருளை உற்பத்தி பண்ணணும்..

**வி.1** : இந்தா... பொருளெ உற்பத்தி பண்ணு...

**வி.2** : அதைச் சந்தைப்படுத்துற தொழில் நுணுக்கம்..

**வி.1** : இந்தா இதுக்குள்ளெ இருக்குது தொழில் நுணுக்கம்..

**வி.2** : அப்புறம்... அதுக்கான 'தில்லுமுல்லு'கள்..

என்னது... தில்லுமுல்லுகளா..?

தில்லுமுல்லு... தில்லுமுல்லு... வியாபாரம்தான் தில்லுமுல்லு...

சொல்லு சொல்லு... நல்லாச் சொல்லு... வியாபாரம் தான் தில்லுமுல்லு...

இரக்கம் இல்லே சொல்லு சொல்லு... இலாபம் தானே தில்லு முல்லு..

தில்லுமுல்லு தில்லுமுல்லு...

வியாபாரந்தான் தில்லுமுல்லு...

கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்!

கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்- அது

கிழக்கு மேக்கா உள்ளெ வந்துச்சி ஜிஞ்சிச்சாம்

கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்-அதுக்குக்

கிரீடம் எடுத்துச் சூட்டி விட்டோம் ஜிஞ்சிச்சாம்!

வியாபாரம்தான் செய்ய வந்தோம் ஜிஞ்சிச்சாம்

விளைச்சலையே வாரிக்கிட்டோம் ஜிஞ்சிச்சாம்

சாட்டை கொண்டு பாட்டுப் பாடி ஜிஞ்சிச்சாம்

நாட்டை விண்டு வாயிலெ போட்டோம் ஜிஞ்சிச்சாம்

ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்.. ஜிஞ்சிச்சாம்

வியாபாரி அதிகாரியா... அதிகாரி அரசாங்கமா மாறுனதுதான் நம்ம வரலாறு! அதுதான் நம்ம நாடகமாயணம்!

வியாபாரந்தான் நம்ம நாடகமாயணம்...

இன்னிக்கு நம்ம நாடகந்தான் வியாபாரமாயணம்!..... வியாபாரமாயணம்...

வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

**வி.2** : உற்பத்திப் பொருளை நல்ல லாபத்தோட... உபரி வருமானத்தோட - சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம்... ம்ம்ம்... சொல்லு...

**வி.1** : உபரி வருமானத்தோட சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம்...

**வி.2** : பணம் கொட்டோ கொட்டுன்னு கொட்டிகிட்டுருக்கணும்...பணம்...

**வி.1** : கொட்டோ கொட்டுன்னு கொட்டணும்...இரக்க வியாபாரத்துக்கு...

**வி.2** : எதிரி!...

**வி.1** : லாபம்தான்...

**வி.2** : உபரிதான்...

**வி.1** : வியாபாரத்துக்குச்...

**வி.2** : சபரி!

**வி.1** : வெரிகுட்... பொருளாதரத்துக்கு முட்டுக் கொடுக்கும் உள்நாட்டு மூலதனம்...

**வி.2** : அதன் முட்டியை முறிக்கும் பன்னாட்டு மூலதனம்...

**வி.1** : வாஸ்கோடகாமா வந்தவழி வியாபாரம்தான்... வியாபாரமாயணம்!

**வி.2** : கொலம்பஸோட சொந்தவழியும் வியாபாரம்தான்!... வியாபாரமாயணம்!

**வி.1** : ஒவ்வொண்ணும் ஒவ்வொரு அரசியல்...

**வி.2** : ஒவ்வொரு நிமிஷமும் காசு... வியாபாரமாயணம்!

**வி.1** : ஒவ்வொரு ஒறவும் காசு!...வியாபாரமாயணம்!

**வி.2** : லாபம்...லாபம்...

**வி.1** : லாபம்...லாபம்....

**வி.1** : அதுக்கான போட்டிபொறாமையிலெயிருந்து... வஞ்சகம் வெஞ்சினம்.... கொலை படுகொலை